**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) - 2021**

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 5788–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் திருத்திய நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சாவிருந்த தற்போதைய பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண வீதி அதிகாரசபைகள் செயற்திட்டத்தின் திருத்திய கூறு - 02 க்கான அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு – 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியன் தொகையாகும். கூறானது அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 15 ஆகஸ்ட் 2018 ஆம் திகதிய 18.'.1682.'.805.'.051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்கள் | அமைச்சில் காணப்படும் பொருத்தமான ஊழியரை உள்ளீர்ப்பதன் மூலம் செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் மாகாண மட்ட அமுலாக்கல் அலகுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு அமைச்சுப் பதவியினர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்ட்டது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்குக்காக பொருத்தமான அமைச்சுப் பதவியினர்களை உள்ளீர்க்கும் அவசியமான தேவைப்பாடு இல்லை. | அமைச்சரவை தீர்மானத்துடன் இணங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணங்கள் – 756 ரூ 757 | ஆண்டுக்கான மீளாய்வின் கீழ் வருடாந்த சொத்து.'.இருப்பு மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த சொத்து.'.இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | சொத்து.'.இருப்பு மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01.'.2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் வருடத்தில் நான்கு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஆண்டுக்கான மீளாய்வின் போது இரண்டு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீள்கட்டமைப்பு பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உடன்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் 37 ஒப்பந்த பொதிகள் 31 திசெம்பர் 2019 இல் உள்ளபடியாக வழங்கப்பட வேண்டியிருந்தும் 26 பொதிகள் மாத்திரமே ஆண்டுக்கான மீளாய்வின் போது 31 திசெம்பர் 2021 இல் உள்ளபடியாக வழங்கப்பட்டுள்ளது. | ஐ.அ.டொலர் 70 மில்லியன் பூர்த்தியாக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் பூர்த்தியை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 வழங்கப்பட்ட கட்டம் 01 இன் ளீ 01இ ளீ 02இ றேீ 01இ நீ 01 மற்றும் நீ 02 பொதிகளின் கட்டுமானம்.்.அபிவிருத்தி உரிய திகதிகளில் பூர்த்தியாக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய අමප/18/1682/805/051 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் செலவை குறைப்பதற்கு அனைத்து மாகாணங்களில் தற்போதிருக்கும் பணியாளர்களை பயன்படுத்தி செயற்திட்ட முகாமைத்துவ அலகு உருவாக்கப்படல் வேண்டும். எனினும், பிராந்திய மட்டத்தில் நிறைவேற்று பொறியியலாளர்கள் செயற்திட்ட உதவி வதிவிட பொறியியலாளர்களாக நியமிக்கப்பட்டு டீழுஞ இல் பராமரிப்புக் கிரயங்கள் ரூபா 170 மில்லியன் மதிப்பிடப்பட்டு 2022 மார்ச் 31 அளவில் ரூபா 119 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இச்செயற்திட்டத்திற்காக நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் வாகனங்களை பயன்படுத்தக் கூடியதாக இருந்தும் ஒப்பந்த கொடுப்பனவு பட்டியல்களின் முரண்களை உள்ளடக்குவதன் மூலம் 31 மார்ச் 2022 வரை உதவி வதிவிட பொறியியலாளர்களுக்கான வாகன ஏற்பாடுகளுக்காக மொத்தம் ரூபா 65 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | உலக வங்கி செயற்திட்டங்கள் போன்ற பாரிய ஒப்பந்தங்களின் தளங்களுக்கு அருகில் உதவி வதிவிட பொறியியலாளர்களின் அலுவலகம் பராமரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் திறைசேறியானது கொடுப்பனவை அங்கீகரித்துள்ளது. | அமைச்சரவை தீர்மானத்துடன் இணங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட 2019 திசெம்பர் 19 ஆம் திகதிய ீளு.்.ளீ.். ளுடீ .். ஊசைஉரடயச .்.06.்.2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவத்தின் உயர் பரிமாற்ற கிரயங்கள் ஒரு செயற்திட்டத்தின் பகுதியாக நிறைய பணங்களை செலவளித்தல் விவேகமான அரசாங்க நிதி முகாமைத்துவத்தையும் வகைகூறலையும் பாதகமாக பாதிக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் சுற்றறிக்கையினை கவனத்தில் கொள்ளாது தற்போதுள்ள வளங்களை பயன்படுத்துவதற்கு பதிலாக மொத்தம் ரூபா 145 மில்லியன் செலவளிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைக்கப்பட்ட சுற்றறிக்கையயை வெளியிடுவதற்கு முன் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு ஆலோசகர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். | தொடர்பான சுற்றறிக்கையுடன் இணங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்திற்கான ஆலோசகர்கள் தெரிவின் போது தெரிவுசெய்யப்பட்ட விலைமனு வேட்பாளர்கள் போக்குவரத்து வசதிகள், வாகன முன்பதிவு தொடர்பாக குறிப்பிடவில்லை என்பதுடன் பெறுகை விளம்பரத்திலும் கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும், ஆர்ஈ உடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் வாகனம் வழங்கப்படும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்ஈ இற்காக வாகனங்கள், வீடு மற்றும் தளபாடங்களை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு 2022 மார்ச் 31 வரை தொடர்ச்சியான கொடுப்பனவு ரூபா 73 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | 20 வருடத்துக்கு மேல் அனுபவம் உடைய , பின்பற்றப்பட வேண்டிய செய்முறைகளை அறிந்த நபர்கள் செயற்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இதனால், விலைமனு ஆவணத்திலும் பெறுகை விளம்பரத்திலும் இதனை குறிப்பிடவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்த செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் பிரகாரம் வதிவிட பொறியியலாளர் அலுவலகத்துடன் தொடர்புபட்ட தளபாடம் மற்றும் உபகரணம் மட்டும் ஒப்பந்த இறுதியில் வரிசை அமைச்சுக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். எனினும், ஏஆர்ஈ அலுவலகம், ஆர்ஈ மற்றும் ஏஆர்ஈ வீடுகள் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட அனைத்து தளபாடம் மற்றும் உபகரணங்கள் ஒப்பந்தக்காரரின் சொத்தாக இருக்கும். அதன்படி, ஒப்பந்த உடன்படிக்கையின் தவறு காரணமாக அரசாங்க நிதி மூலம் செலுத்தப்பட்ட ரூபா 42 மில்லியன் சொத்துக்களின் உரிமை அரசாங்கத்துக்கு நட்டமாக்கப்படும். இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு செலவினங்கள் நட்டமாகிறது. | வதிவிட பொறியியலாளர்களின் அலுவலக தளபாடம் அமைச்சின் சொத்தாக இருந்தாலும் ஏஆர்ஈ அலுவலக தளபாடம் ஒப்பந்தக்காரரின் சொத்தாகும். இதுவொரு தவறல்ல ஆனால் ஒப்பந்த உடன்படிக்கையை தயாரிக்கும் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | இத்தகைய செலவினங்களை தவிர்க்கும் வகையில் ஒப்பந்த உடன்படிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.3 கள ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| **வடலே் மாகாணம் - என்டபில்யுபி பொதிகள் 1,2,3**<br>பிஆர்டி இனால் தெரிவு செய்யப்பட்ட இப்பொதியில் 12 வீதிகளிடையே 04 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு வீதிகள் தெரிவிற்கு சாத்தியவள ஆய்வுடன் பொருத்மான முறை பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் அரசியல் அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைய ஏனைய 08 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், 2015 தொடக்கம் 2020 வரையான இறுதி 05 வருட காலப்பகுதியின் போது அத்தெரிவு செய்யப்பட்ட வீதிகள் பராமரிப்பிற்காக மொத்தம் ரூபா 33.1 மில்லியன் செலவளிக்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 29 ஆம் திகதிய මාසං/1/3/17/22 ஆம் இலக்க மாகாண பணிப்பாளரின் கடிதத்தில் 2015 தொடக்கம் 2020 வரையான பராமரிப்பு செலவினம் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அபிவிருத்தி செய்வதற்கான வீதிகள் தெரிவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறை பயன்படுத்தப்படல் வேண்டும். |